கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Calandar Case .No. 146 /2019**

Deposition of witness for Petitioner: L.W 1/ P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சபரிநாதன் |
| கணவர்/ தந்தை பெயர் | : | ராஜகுரு |
| தொழில் | : | பூக்கடை வைத்துள்ளேன் |
| கிராமம் | : | தேனி |
| தாலுகா / மாவட்டம் | : | தேனி |
| வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14/08/2026

*( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காவல்துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)*

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 01.08.2012ம் தேதி எனக்கு சொந்தமான 40 கிராம் எடையுள்ள தங்க நகையை ஆஜர் எதிரி நடத்தி வந்த SS Gold நகைக்கடையில் அடகு வைக்க சென்றேன். நான் மேற்படி நகையை ரூ.58,000/–அடகு வைத்தேன். அதன் பிறகு 10.09.2012ம் தேதி அன்று 10.900 கிராம் எடையுள்ள நகையை ரூ.21,000/– அதே கடையில் அடகு வைத்தேன். அதன் பிறகு 05.02.2013 அன்று எனது நகைகளை திருப்புவதற்காக SS Gold நகை கடைக்கு ரூ.79,000/– பணத்தினை எடுத்துச் சென்றேன். கடை பூட்டி இருந்தது. பக்கத்தில் விசாரித்த போது அவர்கள் நகைக்கடையில் உள்ள நகைகளை எடுத்துக்கொண்டு ஆஜர் எதிரி தலைமறைமாகி விட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்க சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த **புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.(ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.08.14 12:04:07 +0530